**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

**ப்ராம்ப்ட்டன் நகரமானது, சிங்க்வாகவ்ஸி நல்வாழ்வு  மையத்திற்காக, கனடா மற்றும் ஒன்ட்டேரியோ ஆகிய அரசுகளிடம் இருந்து  முதலீடுகளை பெற்றுவிட்டது**

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 9, 2021) – இன்றைய தினம், மேயர் பேட்ரிக் ப்ரவுன்; உள்கட்டுமானம் மற்றும் சமுதாயங்களுக்கான அமைச்சர் மேதகு கேத்தரீன் மெக்கன்னா அவர்கள் சார்பில் ப்ராம்ப்ட்டன் வடக்கு நாடாளுமன்ற உறுப்பினராகிய ரூபி சஹோட்டா; ப்ராம்ப்ட்டன் கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர் மணீந்தர் சித்து; ஒன்ட்டேரியோவின் உள்கட்டுமான அமைச்சராகிய மேதகு லாரீ ஸ்காட் சார்பாக சிறுவணிகம் மற்றும் அரசு அலுவலகப் பணிகளில் தொய்வுகளை குறைத்தலுக்கான மற்றும் சிறு வணிகங்களுக்கான  இணை அமைச்சரும் ப்ராம்ப்ட்டன் தெற்கு  நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மேதகு ப்ரப்மீத் சர்க்காரியா; ப்ராம்ப்ட்டன் மேற்குப் பகுதி மாகாண நாடாளுமன்ற உறுப்பினராகிய அமர்ஜோத் சாந்து ஆகியோர் சிங்க்வாகவ்ஸி நல்வாழ்வு  மையத்தை புனரமைப்பதற்கான நிதி வழங்கலை அறிவித்தனர்.

கனடா அரசாங்கமானது, *கனடாவில் முதலீடு செய்தல்* எனும் திட்டத்தில் உள்ள சமூக, கலாச்சார மற்றும் பொழுதுபோக்கு உள்கட்டுமான வழிமுறை மூலமாக (Culture and Recreation Infrastructure Stream (CCRIS)) $572,000 நிதியை முதலீடு செய்கிறது. ஒன்ட்டேரியோ அரசாங்கம் $476,619 அளவுக்கான நிதி வழங்கும் அதே நேரத்தில் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமும் தன் பங்காக $381,381 நிதி ஒதுக்கியுள்ளது.

அணுகல்தன்மை மற்றும் பயனர் அனுபவத்தை மேம்படுத்துவதற்காக, இந்த பொழுதுபோக்கு மையத்தில் உட்புற மற்றும் வெளிப்புற புனரமைப்புக்களைச் செய்ய இந்த திட்டப்பணி மேற்கொள்ளப்படுகிறது. உட்புற மேம்படுத்தல்களில் புதிய கழிப்பறைகள், உடை மாற்றும் அறைகள், ஒரு எழில் கூட்டும் அகம், லாக்கர் வசதிகள் மற்றும் ஷவர் குளியல் வசதிகள் ஆகியவை அடங்கும். சுடுநீர் தொட்டி (ஹாட் டப்) இருக்கும் பகுதிகளுக்கு புதிய தரை ஓடுகள் வேய்ந்து புதுப்பிப்பது உட்பட அனைத்து பகுதிகளிலும் வடிகால் வசதிகள் மற்றும் கட்டிடத்தில் உள்ள பாதுகாப்பு ஆகியவை மேம்படுத்தப்படும்.

கட்டிடத்தின் வெளிப்புறத்தில், நடக்கும் பாதைகள் மற்றும் நீர் பிடிப்பு பகுதியில்  செய்யப்படும் மேம்பாடுகள் வடக்குப் பகுதியில் நீர் வழிந்தோடும் திறனை மேம்படுத்தும். மேம்படுத்தப்பட்ட வாகன நிறுத்துமிட விளக்குகள் பிரகாசமான, அதிக ஆற்றல் திறன் கொண்ட சாதனங்களைக் கொண்டிருக்கும். சிங்க்வாகவ்ஸி நல்வாழ்வு  மையத்திற்கான மேம்படுத்தல்கள் என்பது, பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கிற்கான மாஸ்டர்திட்டத்தின் (Parks and Recreation Master Plan),  ஒரு பகுதியாகும்; இது ப்ராம்ப்ட்டன் நகரின் பொழுதுபோக்கு மையங்களுக்கான புதுப்பித்தல் திட்டமாகும்.

கோவிட்-19 தொற்று பரவல் காரணமாக மாகாணம் முழுவதும் முடக்கப்பட்டதால், சிங்குவாகவ்ஸி நல்வாழ்வு  மையம் மூடப்பட்டுள்ளது. புதுப்பித்தல் வேலைகள் 2021 ஆம் ஆண்டின் வசந்த காலத்தில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

**லின்குகள்**

- [கனடா மற்றும் ஒன்ட்டேரியோ அரசுகள் ப்ராம்ப்ட்டன் நகரின் பொழுது போக்கு உள்கட்டுமானத்தை மேம்படுத்த முதலீடு செய்யவிருக்கின்றன (Canada and Ontario invest to improve recreation infrastructure in Brampton)]
- [பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கிற்கான மாஸ்டர்திட்டம் (Parks and Recreation Master Plan)]

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ப்ட்டன் நகரின் சிங்குவாகவ்சி நல்வாழ்வு  மையத்திற்காக இந்த குறிப்பிடத்தக்க முதலீடுகளை கனடா அரசு மற்றும் ஒன்ட்டேரியோ அரசாங்கங்களிடமிருந்து பெறுவதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். ப்ராம்ப்ட்டன் ஒரு ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான நகரமாகும், குடியிருப்பாளர்கள் ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கவும், வேடிக்கையாக பொழுது போக்கவும்,  நமது பொழுதுபோக்கு மையங்கள் அனைத்திலும் எளிதில் அணுகக்கூடிய வகையிலான, பாதுகாப்பான அனுபவத்தை தொடர்ந்து வழங்குவதற்கான அனைத்தையும் சிங்குவாகவ்ஸி நல்வாழ்வு மையத்தில் கிடைக்கச் செய்வதை நாங்கள் உறுதிப்படுத்துவோம்.

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகரின் பொழுதுபோக்கு மையங்கள்தான் நமது சமூகத்தின் இதயம் ஆகும். பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கு மாஸ்டர் திட்டத்தின் ஒரு பகுதியாக சிங்குவாகவ்ஸி நல்வாழ்வு  மைய மேம்பாடுகளைச் செய்ய ஆதரவு தந்த மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்களுக்கு நன்றி. சிங்குவாகவ்ஸி நல்வாழ்வு  மையத்தை மேம்படுத்துவது என்பது, ப்ராம்ப்ட்டனில் பொழுதுபோக்குகளை மேம்படுத்துவதோடு அனைத்து ப்ராம்ப்ட்டன் நகரவாசிகளுக்கும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை ஊக்குவிக்கவும் உதவும். "

- *ரொவீனா சான் ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர் வார்டுகள் 1 & 5; தலைமைப் பொறுப்பு, சமுதாய சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"கட்டிட வசதியில் கிடைக்கின்ற அணுகல்தன்மை, பாதுகாப்பு மற்றும் ஒட்டுமொத்த பயனர் அனுபவத்திற்கு சிங்குவாகவ்ஸி நல்வாழ்வு  மையத்தில் உள்புற மற்றும் வெளிப்புற மேம்பாடுகள் செய்வது அவசியம். இந்த புனரமைப்புகளைத் துவங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், மேலும் ப்ராம்ப்ட்டனில் செய்யப்படவிருக்கின்ற எதிர்காலத் திட்டங்களிலும் அனைத்து மட்ட அரசாங்கங்களுடனும் தொடர்ந்து ஒத்துழைப்பு பெறுவதை எதிர்பார்க்கிறோம்.

- *சார்மேய்ன் வில்லியம்ஸ், நகர கவுன்சிலர் வார்டுகள் 7 & 8; தலைமைப் பொறுப்பு, சமுதாய சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"நமது சமூகத்திற்கு தேவையான ஆதரவுகளைக் கொண்டுவருவதற்காக அனைத்து மட்ட அரசாங்கங்களுடனும் இணைந்து பணியாற்ற ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் அர்ப்பணிப்பு கொண்டுள்ளது. நமது சமூகத்தில் பொழுதுபோக்கு வசதிகளைப் புதுப்பிப்பதற்கும், ப்ராம்ப்ட்டன்வாசிகளுக்கு மிகச்சிறந்த

பொழுதுபோக்கிற்கான வாய்ப்புகளை வழங்குவதற்கும் என, பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கு மாஸ்டர் திட்டத்தின் மூலோபாய அணுகுமுறையுடன் சிங்குவாகவ்ஸி நல்வாழ்வு மையத்திற்கான முதலீடுகள் ஒத்துப்போகின்றன. ”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக இயக்குனர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“சமூக பொழுதுபோக்கு மையங்களில் முதலீடு செய்வது என்பது, மக்களின் ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் ஊக்குவிக்கிறது மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய மக்கள் வாழ்வதற்கான, பணியாற்றுவதற்கான மற்றும் குடும்பங்களை வளர்க்க விரும்புகின்ற மற்றும் நிலைத்து நிற்கவல்ல சமூகங்களை உருவாக்குகிறது. சிங்குவாகவ்ஸி நல்வாழ்வு மையத்தை புனரமைப்பு செய்வது என்பது, ப்ராம்ப்ட்டனில் வசிப்பவர்களுக்கான பொழுதுபோக்கு வாய்ப்புகளுக்கு சிறந்த அணுகலை வழங்கும். கனடாவின் உள்கட்டமைப்புக்கான திட்டமானது, ஆயிரக்கணக்கான திட்டப்பணிகளுக்காக முதலீடு செய்கிறது, நாடு முழுவதும் வேலைவாய்ப்புக்களை உருவாக்குகிறது; மேலும் தூய்மையான, மேலும் அனைவரையும் உள்ளடக்கிய சமூகங்களை உருவாக்குகிறது. ”

- *உள்கட்டுமானம் மற்றும் சமுதாயங்களுக்கான அமைச்சர் மேதகு கேத்தரீன் மெக்கன்னா அவர்கள் சார்பில், ப்ராம்ப்ட்டன் வடக்கு நாடாளுமன்ற உறுப்பினராகிய ரூபி சஹோட்டா*

“சமூகம், கலாச்சாரம் மற்றும் பொழுதுபோக்கு உள்கட்டமைப்பு ஆகியவற்றில் முதலீடு செய்வது என்பது அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைத்து நிற்கவல்ல சமூகங்களை உருவாக்குவதற்கு அத்தியாவசியமாகும். சிங்குவாகவ்ஸி நல்வாழ்வு மையத்தில் செய்யப்படும் மேம்பாடுகள் இந்த வசதியமைப்பின் ஆயுட்காலத்தை நீட்டிக்கும், மற்றும் வரவிருக்கும் பல ஆண்டுகளுக்கு நிகழ்ச்சிகள் மற்றும் செயல்பாடுகளை மகிழ்ந்து அனுபவிக்க முடியும் என்பதை உறுதிசெய்கிறது. ”

- *மணீந்தர் சித்து, ப்ராம்ப்ட்டன் கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினராகிய*

“இன்று ப்ராம்ப்ட்டன் நகருக்கான பொழுதுபோக்கிற்காக முதலீடு செய்வதானது, நாளை நாம் விரும்பும் ஒரு நகரத்தை தொடர்ந்து அனுபவிக்க முடியும் என்பதை உறுதி செய்யும். நமது வசதியமைப்புக்களை மேம்படுத்துவதன் மூலமும், குடும்பங்கள் சுறுசுறுப்பாக இருக்க உதவுவதன் மூலமும், அதற்கான வேகத்தைத் சமாளிப்பதற்காக, ஆரோக்கியமான மற்றும் மகிழ்ந்து அனுபவிக்கத்தக்க வழிகளை நமது சமூகத்திற்கு வழங்குகிறோம். ”

- *ஒன்ட்டேரியோவின் உள்கட்டுமான அமைச்சராகிய மேதகு லாரீ ஸ்காட் சார்பாக, சிறுவணிகம் மற்றும் அலுவலகப் பணிகளில் தொய்வுகளை குறைத்தலுக்கான மற்றும் சிறு வணிகங்களுக்கான இணை அமைச்சரும் ப்ராம்ப்ட்டன் தெற்கு நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மேதகு ப்ரப்மீத் சர்க்காரியா;*

"சிங்குவாகவ்ஸி நல்வாழ்வு மைய புனரமைக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அறிவிக்கப்பட்டதில் நான் பரவசமடைகிறேன். நமது மிகப்பெரிய நகரத்தில் செய்யப்படும் இந்த முதலீடானது ப்ராம்ப்ட்டன் நகரவாசிகளுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் ஆரோக்கியமான மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறைகளை கடைப்பிடிக்க மேலும் பல வாய்ப்புகளை வழங்கும். ”

- *அமர்ஜோத் சாந்து , ப்ராம்ப்ட்டன் மேற்குப் பகுதி மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்புகள்**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca

கிறிஸ்ட்டின் புயோல்ட்
பத்திரிக்கை செயலாளர்
ஒன்ட்டேரியோ அரசின் உள்கட்டுமான அமைச்சர்,
மேதகு லாரீ ஸ்காட் அவர்கள் அலுவலகத்தில்
416-454-1782 | christine.bujold@ontario.ca

ஸோஃபியா ஸௌஸா-டயஸ்
தகவல்பரிமாற்றக் கிளை
ஒன்ட்டேரியோ அரசின் உள்கட்டுமான அமைச்சகம்
437-991-3391 | sofia.sousa-Dias@ontario.ca

ஊடக உறவுதொடர்புகள்
கனடா உள்கட்டுமானம்
613-960-9251
கட்டணமில்லா எண்: 1-877-250-7154
மின்னஞ்சல்: infc.media.infc@canada.ca
இவற்றில் எங்களை தொடர்பு கொள்க: Twitter, Facebook
மற்றும் Instagram
வலை: Infrastructure Canada